©
தமிழ்நாடு அரசு
2008

[Regd. No. TN/CCN/117/2006-08.
[விலை: ரூ. 12.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 46]

சென்னை, புதன்கிழமை, நவம்பர் 26, 2008
கார்த்திகை 11, திருவள்ளுவர் ஆண்டு – 2039

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

*[அரசாணை (நிலை) எண் 17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, நாள்: 21 பிப்ரவரி 2008.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 41–B ஆம் பிரிவிலும் 112 ஆம் பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு தொழிலக பெரும் விபத்து ஆபத்துக்களை கட்டுப்படுத்தும் விதிகளில் கீழ்காணும் திருத்தங்களை, இதனால் செய்கிறார். அதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

#### திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்:—

(1) ‘‘தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல்’’ என்ற தொடர் வரும் இடங்களிளெல்லாம், அதற்குப் பதிலாக ‘‘தொழிற்சாலை ஒன்று’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) விதி–2ல்,–

(*a*) பகுதி (*b*)–யின் துணைப் பகுதி (ii) விட்டுவிடப்பட வேண்டும்.

(*b*) பகுதி (*d*)–க்குப் பதிலாக, பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

‘‘(*d*) ‘‘பெரும் விபத்து’’ என்பது தொழிற்சாலை அமைவிடத்திற்கு உள்ளே அல்லது வெளியே உயிரிழப்பிற்குக் காரணமான ஒரு விபத்து அல்லது தொழிற்சாலை அமைவிடத்திற்கு உள்ளே 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்குக் காயங்கள் அல்லது தொழிற்சாலை அமைவிடத்திற்கு வெளியே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்குக் காயங்கள் அல்லது நச்சுத் தன்மைவாய்ந்த இரசாயனங்கள் வெளியேறுதல் அல்லது வெடித்தல் அல்லது தீ பற்றுதல் அல்லது அபாயகரமான இரசாயனப் பொருட்கள் கசிதல் ஆகியவற்றின் காரணமாக தொழிற்சாலை அமைவிடத்திற்கு உள்ளே அல்லது வெளியே அவசரகால விபத்துக்கள் அல்லது தொழிற்சாலை செயல்முறையை நிறுத்தும் அளவிற்கு சாதனங்களுக்கு சேதம் அல்லது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு எனப் பொருள்படும்’’.

(*c*) பகுதி (*g*) விட்டுவிடப்பட வேண்டும்.

(3) விதி 3 இன்,—

(*a*) துணை விதி (1)–ல்,

(*i*) ‘‘தொழிற்சாலை செயல்பாடு’’ என்ற தொடருக்குப் பதிலாக ‘‘தொழிற்சாலை செயல்பாடு அல்லது தனியான சேமிப்பிடம்’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(*ii*) ‘‘விவர அட்டவணை I–இன் பகுதி–I மற்றும்’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘விவர அட்டவணை I–ன் பகுதி I அல்லது’’ என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்,

(*b*) துணை விதி (2)–க்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

''(2) துணை விதி (1)–ன்படி, தொழிற்சாலை செயல்பாடு அல்லது தனியான சேமிப்பிடத்தில் தொழிலை நடத்தும் அனுபோகதாரர் ஒருவர், 5 ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டவாறு பாதுகாப்பு தகவல் விவரத்தாள் வடிவில் தகவல் பெறுவதற்கும், அளிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். பார்வைக்காக தொழிலாளர்கள் கேட்பதன்பேரில், அவர்களுக்கு தகவல் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.''

(*c*) துணை விதி (3)–ல், இரண்டு இடங்களில் வருகிற ''பொருள் பாதுகாப்பு விவரத்தாள்'' என்ற தொடருக்குப் பதிலாக, ''5 ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான பாதுகாப்பு விவரத்தாள்'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(4) விதி–3–க்குப் பின்னர், பின்வரும் விதி சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்; அதாவது:—

''3–A. ஆய்வாளரின் கடமைகள்—

(*a*) ஆய்வாளர், காலண்டர் ஆண்டில் ஒரு முறையேனும் தொழிற்சாலை செயல்பாட்டை அல்லது தனியான சேமிப்பிடத்தை நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும்.

(*b*) ஆய்வாளர், தொழிலை நடத்துகிற அனுபோகதாரர்கள், விதிகளின்படி தொழில் நடத்துகிறாரா என்பது குறித்த அறிக்கையை, தொழிற்சாலை ஆலோசனைப் பணி தலைமை இயக்ககம் மற்றும் தொழிலாளர் நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசின் தொழிலாளர் அமைச்சகம் மூலமாக, சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு ஆண்டுதோறும் அனுப்ப வேண்டும்; மற்றும்

(*c*) இச்சட்டத்தின் கீழ்வரும் தொழிற்சாலை செயல்பாடுகள் அல்லது தனியான சேமிப்பிடங்களைப் பொறுத்தவரையிலும், தொழிற்சாலை சுற்றளவின் வெளியிலிருந்து 500மீ தொலைவு வரையிலுள்ள குழாய்களைப் பொறுத்தவரையிலும், ஆய்வாளர், பின்வருவன தொடர்பாக, உத்தரவுகளையும் நடைமுறைகளையும் செயல்படுத்த வேண்டும். அவை வருமாறு:—

(*i*) 5 ஆம் விதியைச் சேர்ந்த (1) மற்றும் (2) துணை விதிகளுக்கிணங்க, பெரும் விபத்துகள் குறித்த அறிவிக்கை;

(*ii*) 7 மற்றும் 8 ஆம் விதிகளுக்கிணங்க மனைகள் குறித்த அறிவிக்கை;

(*iii*) 10 முதல் 12 வரையிலான விதிகளுக்கிணங்க பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகள்;

(*iv*) 13 ஆம் விதியின்படி, தொழிற்சாலைக்கு உள்ளேயான அவசரகால செயல் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட அவசரகால அதிகாரியிடம் கலந்தாலோசித்து, தொழிற்சாலைக்கு வெளியேயான அவசரகால செயல் திட்டங்களைத் தயாரிப்பதில் ஈடுபடுதல்'' ;

(5) விதி 4–இல்,

(a) துணை விதி (1)–இல்,

(*i*) பகுதி (a)–க்குப் பதிலாக, பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

(*a*) மேற்சொன்ன விவர அட்டவணையின் பாகம்–II, நெடும்பத்தி 2–இல் பட்டியலிடப்பட்டுள்ள, விவர அட்டவணை–I பாகம்–I-இல் வரையறுக்கப்பட்டுள்ள யாதொரு அளவுகோலை நிறைவு செய்யும் அபாயகரமான இரசாயனப்பொருள் தொடர்புடைய தொழில் நடவடிக்கை ''சம்பந்தப்பட்டிருக்கிறது அல்லது சம்பந்தப்பட்டிருக்கலாம்''.

(*ii*) பகுதி–(*b*)–ல், ''குறிப்பிடப்பட்ட அளவு'' என்பதற்குப் பதில் ''குறிப்பிடப்பட்ட தொடக்க அளவு'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(b) துணைவிதி (2)–இல்,

(*i*) ''அனுபோகதாரர்'' என்ற தொடரில் தொடங்கி, ''அவரிடம் தகவல் உள்ளதைக் காட்டுவதற்காக'' என்ற தொடருடன் முடிவடையும் தொடருக்குப் பதிலாக, பின்வரும் தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

'' மேலே துணை விதி (1)–ன்படி, தகவலைக் காட்டுமாறு கேட்பதன்பேரில் அனுபோகதாரர் ஒருவர், அவரிடம் உள்ள தகவலை அளிக்க வேண்டும்'';

(*ii*) பகுதி–(*b*)–ல், துணைப் பகுதி–(ii-)ல், ''பாதுகாப்பு'' என்ற தொடருக்குப் பதிலாக, ''பாதுகாப்பு மற்றும் உடல் நலம்'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(6) விதி 5–இல்,

(*a*) துணை விதி–(1)–ல்

(*i*) ''இடம்'' என்ற தொடருக்குப் பதிலாக, ''இடம் அல்லது குழாய்த் தொடரில்'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(*ii*) ''அனுபோகதாரர் காலம்தாழ்த்தாமல்'' என்ற தொடருக்குப் பதிலாக, ''அனுபோகதாரர் 48 மணி நேரத்திற்குள்ளாக'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(*iii*) ''தலைமை ஆய்வாளர் அறிக்கை'' என்ற தொடருக்குப் பதிலாக, ''ஆய்வாளர் மற்றும் தலைமை ஆய்வாளர் அறிக்கை'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(*b*) துணை விதி–(2)–க்குப் பதிலாக, பின்வரும் துணைவிதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்:—

"(2) ஆய்வாளர் மற்றும் தலைமை ஆய்வாளர் (1) ஆம் துணை விதிக்கிணங்க அறிக்கையைப் பெற்றுக் கொண்டவுடன், பெரும் விபத்து குறித்த முழு ஆய்வினை மேற்கொண்டு, தொழிற்சாலை ஆலோசனைப் பணி மற்றும் தொழிலாளர் நிறுவனங்களின் தலைமை இயக்ககம், மற்றும் இந்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத்தின் மூலமாக சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திற்கு தேவையான தகவல்களை அனுப்ப வேண்டும்."

(*c*) அவ்வாறு அமைத்துக் கொள்ளப்பட்ட (2) ஆம் துணை விதிக்குப் பின்னர், பின்வரும் துணை விதிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன—

(3) "தொழிற்சாலையில் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, அனுபோகதாரர், ஆய்வாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(4) ஆய்வாளர் மற்றும் தலைமை ஆய்வாளர், பெரும் விபத்துகள் குறித்த தகவல்களை தொகுத்து, அதன் ஒரு நகலை தொழிற்சாலை ஆலோசனைப் பணி மற்றும் தொழிலாளர் நிறுவனங்களின் தலைமை இயக்ககம் மற்றும் இந்திய அரசின் தொழிலாளர் அமைச்சகம் மூலமாக சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்துக்கு அனுப்ப வேண்டும்.

(5) பெரும் விபத்துக்கள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு குறைபாடுகளை சரிசெய்வது அவசியம் என்று ஆய்வாளர் மற்றும் தலைமை ஆய்வாளர் கருதினால் அதனை எழுத்துமூலமாக அனுபோகதாரருக்கு அளிக்க வேண்டும்.";

(7) விதி (6)–இல்,

(*a*) " 7–லிருந்து 15 வரையிலான விதிகளுக்கு பொருந்தும் நடவடிக்கைகள்" என்ற தலைப்பிற்குப் பதிலாக பின்வரும் தலைப்பு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது—

"7–லிருந்து 15 வரையிலான விதிகளுக்கு பொருந்தக்கூடிய தொழில் நடவடிக்கைகள் அல்லது தனியாக உள்ள கிடங்கு"

(*b*) "அளவு" என்ற தொடர் வரும் இடங்களிலெல்லாம், "தொடக்க நிலை அளவு" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(c) துணைவிதி (1)–இல்,

*(i) (a)* பகுதியில், "7–லிருந்து 9 வரையிலும் மற்றும் 13–லிருந்து 15 வரையிலுமான விதிகள் என்ற தொடர்களுக்குப் பதிலாக, "7, 8, 13 மற்றும் 15 ஆம் விதிகள்" என்ற தொடர்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(*ii*) பகுதி (*c*)–இல்,

"7–லிருந்து 9 வரையிலான விதிகள்" என்ற தொடருக்குப் பதிலாக "7 மற்றும் 8ஆம் விதி" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(*iii*) பகுதி (*d*)–இல்,

"10–லிருந்து 15 வரையிலான விதிகள்" என்ற தொடருக்குப் பதிலாக "10–லிருந்து 13 வரை மற்றும் 15ஆம் விதி" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(*iv*) துணை விதி (2) விட்டுவிடப்பட வேண்டும்.

(8) 7ஆம் விதியில்—

(*a*) "தொழிலக நடவடிக்கைகள் குறித்த அறிவிக்கை" என்ற தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் தலைப்பு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

**"பணியிடங்கள் குறித்த அறிவிக்கை"**

(*b*) (1) துணை விதியில்:—

(*i*) "தொழிலக நடவடிக்கை" என்ற தொடருக்குப் பதிலாக, "தொழிலக நடவடிக்கை அல்லது தனியாகவுள்ள கிடங்கு" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(*ii*) "3 மாதங்கள்" என்ற தொடருக்குப் பதிலாக, "90 நாட்கள்" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(*iii*) "அளவு" என்ற தொடருக்குப் பதிலாக, " தொடக்க நிலை அளவு" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(C) (2) துணை விதிக்குப் பதிலாக, பின்வரும் துணைவிதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

"(2) இந்த விதியைச் சேர்ந்த (1) துணை விதிக்கு இணங்க அறிக்கை வரப்பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள், தலைமை ஆய்வாளர், அறிக்கையை ஆய்வு செய்ய வேண்டும். அறிக்கையை ஆய்வு செய்வதன்பேரில் சட்டத்தின் அல்லது விதிகளின் விதித்துறைகள் மீறப்பட்டுள்ளன என்று அவர் கருதுவாராகில், இணங்கி நடக்கச் செய்வதற்காக அவர் அறிவிப்பு வெளியிடலாம்";

(9) 8ஆம் விதியில்,—

(*a*) ‘‘7ஆம் விதியின் கீழ் அறிவிக்கையை நாளது வரையாக்குதல்’’ என்ற தலைப்பிற்குப் பதிலாக பின்வரும் தலைப்பு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

‘‘பணியிடம் குறித்த அறிவிக்கையை நாளது வரையாக்குதல்’’.

(*b*) ‘‘குழாய் இணைப்பு’’ அல்லது ‘‘இடை நிறுத்தம்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘குழாய் இணைப்பு’’ அல்லது ‘‘இடை நிறுத்தத்தில்’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(*c*) ’’தலைமை ஆய்வாளர்’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘ஆய்வாளர் மற்றும் தலைமை ஆய்வாளர்’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(10) 9ஆம் விதி விட்டுவிடப்பட வேண்டும்:

(11) 10ஆம் விதியில்,

(*a*) ‘‘பாதுகாப்பு பற்றிய அறிக்கைகள்’’ என்ற தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் தலைப்பு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

‘‘பாதுகாப்பு பற்றிய அறிக்கைகள் மற்றும் பாதுகாப்பு பற்றிய தணிக்கை அறிக்கைகள்’’.

(*b*) (1) துணை விதியில்—

(*i*) ‘‘தொழிலக நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளுதல்’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘தொழிலக நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளுதல்’’ அல்லது ‘‘தனியாக உள்ள கிடங்கு’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(*ii*) ‘‘3 மாதங்கள்’’ என்ற தொடருக்குப் பதிலாக,’’ ‘‘90 நாட்கள்’’ என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(c) (2) மற்றும் (3) துணை விதிகளுக்குப் பதிலாக, பின்வரும் துணை விதிகள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன:—

‘‘(2) புதிய மற்றும் தற்போதுள்ள தொழிலக நடவடிக்கைகளின் அல்லது தனியாகவுள்ள சேமிப்பிடங்களின் அனுபோகதாரர்கள், பாதுகாப்பு பற்றிய தணிக்கையாளர்களின் ஏற்பளிப்பு குழு ஒன்றின் மூலம் ஏற்பளிக்கப்பட்ட அல்லது தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரின் கருத்துப்படி இந்நோக்கத்திற்குப் பொருத்தமானது என அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகுதிவாய்ந்த முகவரமைப்பு ஒன்றின் மூலம் பாதுகாப்பு பற்றிய தணிக்கையை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தகைய பாதுகாப்புத் தணிக்கைப் பணி, கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.—

(*a*) பொருத்தமான தொழிற்சாலை பணியாளர் குழு ஒன்றின் மூலம் நிறுவன அளவில் ஆண்டுக்கொருமுறை : ஆனால், வெளியாரைக் கொண்டு தணிக்கை மேற்கொள்ளப்படும் ஆண்டில், அந்த ஆண்டிற்கான நிறுவன அளவிலான தணிக்கை மேற்கொள்ளத் தேவையில்லை;

(*b*) இது தொடர்பாக ஏற்பளிக்கப்பட்ட தகுதிவாய்ந்த முகவரமைப்பு வெளியாரைக் கொண்டு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை;

(3) தணிக்கைப் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதைப் பொறுத்தவரையில், அனுபோகதாரர், பாதுகாப்பு பற்றிய தணிக்கைப் பணி முடிவடைந்த 30 நாட்களுக்குள் தலைமை ஆய்வாளருக்கு அறிக்கை ஒன்றை அனுப்ப வேண்டும்.’’

(12) 11ஆம் விதியில்—

(*a*) ‘‘10ஆம் விதியின்கீழ் அறிக்கைகளை நாளது வரையாக்குதல்’’ என்ற தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் தலைப்பு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

‘‘10 ஆம் விதியின் கீழ் பாதுகாப்பு குறித்த அறிக்கைகளை நாளது வரையாக்குதல்’’

(*b*) (1) துணை விதியில்—

(*i*) ‘‘தொழிலக நடவடிக்கை’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘தொழிலக நடவடிக்கை அல்லது தனியாகவுள்ள சேமிப்பிடம்’’ என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(*ii*) ‘‘தலைமை ஆய்வாளர் குறைந்தது 3 மாதங்கள்’’ என்ற தொடருக்குப் பதிலாக ‘‘ஆய்வாளர்’’ மற்றும் ‘‘தலைமை ஆய்வாளர் குறைந்தது 90 நாட்கள்’’ என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(*c*) (2) துணை விதியில்—

(*i*) ‘‘தொழிலக நடவடிக்கை’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘தொழிலக நடவடிக்கை அல்லது தனிப்படுத்தப்பட்ட சேமிப்பிடம்’’ என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(*ii*) ‘‘1 மாதம்’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘30 நாட்கள்’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(*iii*) இரண்டு இடங்களில் காணப்படும் ‘‘தலைமை ஆய்வாளர்’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘ஆய்வாளர் அல்லது தலைமை ஆய்வாளர்’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(13) விதி 12–க்குப் பதிலாக, பின்வரும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; அதாவது—***"12. "ஆய்வாளர்" மற்றும் தலைமை ஆய்வாளருக்கு மேற்கொண்டும் தகவல் அனுப்ப வேண்டிய அவசியம்***:—10 மற்றும் 11 ஆம் விதிகளின்படி, அனுபோகதாரர் ஒருவர், "தொழிலக நடவடிக்கை அல்லது தனிப்படுத்தப்பட்ட சேமிப்பிடம்" தொடர்பான பாதுகாப்பு தணிக்கை அறிக்கையை, "ஆய்வாளர்" அல்லது தலைமை ஆய்வாளருக்கு அனுப்புகிறவிடத்து, "ஆய்வாளர்" அல்லது "தலைமை ஆய்வாளர்" அனுபோகதாரருக்கு அறிவிப்பு ஒன்றை சார்வு செய்வதன் மூலம், அந்த அறிவிப்பில் குறிப்பிடக் கூடியவாறான அத்தகைய கூடுதல் தகவலை அளிக்குமாறு அவரைக் கோரலாம். அனுபோகதாரர், அத்தகைய தகவலை, 90 நாட்களுக்குள் ஆய்வாளருக்கு அல்லது தலைமை ஆய்வாளருக்கும் அனுப்ப வேண்டும்."

(14) விதி 13—ல்,

(*a*) துணை விதி (1)–க்குப் பதிலாக, பின்வரும் துணைவிதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது—

"(1) விவர அட்டவணை–9–இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களும் தொழிலக நடவடிக்கையும் அல்லது தனிப்படுத்தப்பட்ட சேமிப்பிட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிற பணியிடத்தில் பெரிய விபத்துகள் குறித்து எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரங்கள் அடங்கிய பணியிட அவசரகால திட்டம் ஒன்றை அனுபோகதாரர் தயாரித்து நாளது வரையில் பராமரித்து ஆய்வாளர் அல்லது தலைமை ஆய்வாளரிடம் அளிக்க வேண்டும். அந்தத் திட்டம், பணியிடத்தில் பாதுகாப்பிற்குப் பொறுப்பு வகிக்கும் நபரின் பெயரையும், அவசரநிலை ஏற்படும் நேர்வில், திட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களையும் கொண்டிருக்கும்."

(*b*) துணை விதி (2)–ல்—

(*i*) "தொழிலக நடவடிக்கை" என்னும் தொடருக்குப் பதிலாக, "தொழிலக நடவடிக்கை அல்லது தனிப்படுத்தப்பட்ட சேமிப்பிடம்" என்னும் தொடர் கொள்ளப்பட வேண்டும்.

(*ii*) "அதனால் பாதிக்கப்பட்ட" என்னும் தொடருக்கு பதிலாக, "அதனுடன் தொடர்புடைய" என்னும் தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(*c*) துணை விதி (3)–ல்,—

(*i*) பகுதி (*a*) மற்றும் (*b*)–க்குப் பதிலாக, பின்வரும் பகுதிகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

"(*a*) தொழிலக நடவடிக்கை அல்லது தனிப்படுத்தப்பட்ட சேமிப்பிட நடவடிக்கை தொடங்கப்படுவதற்கு முன்:

(*b*) நடைமுறையிலுள்ள தொழிலக நடவடிக்கையை அல்லது தனிப்படுத்தப்பட்ட சேமிப்பிட நடவடிக்கையைப் பொறுத்த நேர்வில், இந்த விதிகள் செயலுக்கு வந்த 90 நாட்களுக்குள்".

(*ii*) துணை விதி (3)–க்குப் பின்னர் பின்வரும் துணை விதிகள் சேர்க்கப்பட வேண்டும். அதாவது:—

"(4) குறைந்தது ஆறுமாதங்களுக்கு ஒரு முறையாவது பணியிடத்தில், அவசர காலத்தில் மேற்கொள்ளவேண்டியவை குறித்த மாதிரி தற்காப்புப் பயிற்சி நடத்தப்படுவதை அனுபோகதாரர் உறுதி செய்ய வேண்டும்".

"(5) துணை விதி (4)–ன் கீழ் நடத்தப்பட்ட மாதிரி தற்காப்புப் பயிற்சி குறித்த விரிவான அறிக்கை ஒன்று, ஆய்வாளருக்கு "அல்லது தலைமை ஆய்வாளருக்கு உடனடியாகக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்".

(15) விதி–14 விட்டுவிடப்பட வேண்டும்.

(16) விதி 15–க்குப் பதிலாக, பின்வரும் துணை விதிகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:– ***"15. பெரும் விபத்துக்களால் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டிய தகவல்***"

"(1) பெரிய விபத்தினால் பாதிக்கப்படும் பகுதி ஒன்றில் இருக்கக்கூடிய, பணியிடத்திற்கு வெளியே உள்ள நபர்களிடம்:

(*a*) பெரிய விபத்தின் அபாயம் குறித்த தன்மை; மற்றும்

(*b*) பெரிய விபத்து ஏற்படுகிற நேர்வில் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் செய்ய வேண்டியவை, 'செய்யக் கூடாதவை' பற்றி தெரிவிப்பதற்கு, அனுபோகதாரர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(2) தொழிலக நடவடிக்கை அல்லது தனிப்படுத்தப்பட்ட சேமிப்பிட நடவடிக்கை தொடங்குவதற்கு முன், நடைமுறையிலுள்ள தொழிலக நடவடிக்கை அல்லது தனிப்படுத்தப்பட்ட சேமிப்பிட நடவடிக்கை நீங்கலாக, தொழிலக நடவடிக்கை அல்லது சேமிப்பிட நடவடிக்கை பற்றி நபர்களிடம் தெரிவிக்க, (1) துணைவிதியில் கோரியுள்ளவாறு அனுபோகதாரர், நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கான விதிகள் செயலுக்கு வந்த 90 நாட்களுக்குள், அனுபோகதாரர், (1) துணை விதியில் கோரப்பட்டுள்ளவற்றுக்கு இணங்கி நடக்க வேண்டும்."

(17) விதி 16–க்குப் பதிலாக கீழ்க்காணும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்:

16. ***தகவலைத் தெரிவித்தல்***:—5 ஆம் விதி 7 முதல் 15 வரையிலான விதிகளின்கீழ் அறிவிக்கப்பட்ட தகவலை மதிப்பிடும் நோக்கத்திற்காக, ஆய்வாளர் அல்லது தலைமை ஆய்வாளர், வேறு சில நபர்களிடம் அந்தத் தகவலை தெரிவிக்கிறவிடத்து, அந்த நபர் நேர்விற்கேற்ப ஆய்வாளர் அல்லது தலைமை ஆய்வாளர், தெரிவித்த அந்த நோக்கத்திற்காகவன்றி, மற்றபடி, வேறு எந்த நோக்கத்திற்காகவும் அந்தத் தகவலை பயன்படுத்தக் கூடாது. அந்தத் தகவலை தெரிவிக்கும் முன்னர், நேர்விற்கேற்ப ஆய்வாளர் அல்லது தலைமை ஆய்வாளர், இந்த விதியின்கீழ் அவருடைய கடப்பாடுகள் குறித்து அந்த நபருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(18) விதி—17 விட்டுவிடப்பட வேண்டும்.

**(19)** அட்டவணைகள் **1, 2, 3** ஆகியவற்றுக்குப் பதிலாக, கீழ்க்காணும் விவர அட்டவணைகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது—

**"விவர அட்டவணை–I**

*[(2) (a) (i), 3 (1) மற்றும் 4 (1) (a) ஆம் விதிகளைக் காண்க.]*

இரசாயனப் பொருட்களின் குறிப்பிடத்தக்க அளவும் பெயர் பட்டியலும்

**பகுதி–1**

**குறிப்பிடத்தக்க அளவு**

(*a*) ***நச்சுத்தன்மையுள்ள இரசாயனப் பொருட்கள்***:

கடுமையான நச்சுத்தன்மை கொண்டுள்ள கீழ்க்காணும் இரசாயனப் பொருட்கள், தங்களுடைய இயற்பியல் மற்றும் வேதியியல் கூறுகளால் அபாயகரமான பெரிய விபத்துக்களை ஏற்படுத்தும் திறன் கொண்டவை:—

| *தொடர் எண்.* | *நச்சுத்தன்மையின் அளவு.* | *நச்சுத்தன்மை கொண்ட நடுத்தர வீரியம் உள்ள லெத்தாலை, வாய்வழியாக அளிக்கும் அளவு LD 50 (மி.கி/கி.கி. பரிசோதனைக்கு உட்படுத்துகிற விலங்குகளின் உடல் எடை).* | *நச்சுத்தன்மை கொண்ட நடுத்தர வீரியம் உள்ள லெத்தாலை, தோல்வழியாக அளிக்கும் அளவு LD 50 (மி.கி/கி.கி. பரிசோதனைக்கு உட்படுத்துகிற விலங்குகளின் உடல் எடை).* | *நச்சுத்தன்மை கொண்ட நடுத்தர அடர்த்தி உள்ள லெத்தாலை, மூக்கு வழியாக அளிக்கும் அளவு (நான்கு மணி நேரம்) LD 50 (மி.கி/கி.கி. பரிசோதனைக்கு உட்படுத்துகிற விலங்குகளின் உடல் எடை).* |
|---|---|---|---|---|
| (1) | உயரளவு நச்சுத் தன்மை | 1–50 | 1–200 | 0.1–0.5 |
| (2) | உயரளவு நச்சுத் தன்மை | 51–500 | 201–2000 | 0.5–2.0 |

(*b*) ***தீப்பற்றி எரியக்கூடிய இரசாயனப் பொருட்கள்:***

***தீப்பற்றி எரியக் கூடிய வாயுக்கள்***: இயல்பான அழுத்தத்தில், வாயு நிலையில் உள்ள இரசாயனப் பொருட்கள் காற்றில் கலந்து தீப்பற்றி எரியக் கூடியவையாகின்றன. அவற்றின் கொதிநிலை, இயல்பான அழுத்தத்தில் 20 சென்டிகிரேடாக அல்லது அதற்குக் குறைவாக இருக்கும்.

(*ii*) ***எளிதில் தீப்பற்றி எரியக்கூடிய திரவங்கள்:***

23 சென்டிகிரேடுக்குக் குறைவான வெப்ப நிலையைக் கொண்டுள்ள இரசாயனப் பொருட்களின் கொதிநிலை இயல்பான அழுத்தத்தில் 20 சென்டிகிரேடுக்கு மேற்பட்டதாக இருக்கும்.

(*iii*) ***தீப்பற்றி எரியக்கூடிய திரவங்கள்***:

65 சென்டிகிரேடுக்கு குறைவான வெப்பநிலையைக் கொண்டும், அழுத்த நிலையில் திரவமாகவும் தங்கியுள்ள இரசாயனப் பொருட்களை, உயர் அழுத்தம், அதிக வெப்பநிலை போன்ற குறிப்பிட்ட செய்முறைநிலைகளுக்கு உட்படுத்துகிறவிடத்து, அவை அபாயகரமான பெரிய விபத்துக்களை ஏற்படுத்தலாம்.

(*c*) ***வெடி மருந்துகள்:***

நெருப்பு, வெப்பம் அல்லது ஒளி உமிழ்கிற இரசாயன நிலைமைகளின்போது அல்லது டைநைட்ரோ பென்சீனைக் காட்டிலும் அதிர்ச்சிகள் அல்லது உராய்வுகளின் போது உடனடியாக வெடிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள்.

## பாகம்—II

### அபாயகரமான மற்றும் நச்சுத் தன்மை உடைய இரசாயனப் பொருட்களின் பட்டியல்

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 1. | அசிட்டோன் |
| 2. | அசிட்டோன் சைனோஹைட்ரின் |
| 3. | அசிட்டைல் குளோரைடு |
| 4. | அசீட்டலின் (ஈத்தைன்) |
| 5. | அக்ரோலின் (2—புரோபினால்) |
| 6. | அக்ரிலோநைட்ரில் |
| 7. | அல்டிகார்ப் |
| 8. | அல்டிரின் |
| 9. | ஆல்கைல் தாலேட் |
| 10. | அல்லில் ஆல்காஹால் |
| 11. | அல்லிலாமைன் |
| 12. | ஆல்பா நாப்தல் தியோரியா (ANTU) |
| 13. | அமினோ டைபினையில்—4 |
| 14. | அமினோபினால்—2 |
| 15. | அமிட்டான் |
| 16. | அமோனியா |
| 17. | அமோனியம் நைட்ரேட் |
| 18. | உரங்களில் அமோனியம் நைட்ரேட்ஸ் |
| 19. | அமோனியம் சல்ஃபாமேட் |
| 20. | அனபேசின் |
| 21. | அனிலின் |
| 22. | அனிசிடின்—P |
| 23. | ஆன்டிமனி மற்றும் சேர்மானங்கள் |
| 24. | ஆன்டிமனி ஹைட்ரைட் (ஸ்டிபைன்) |
| 25. | ஆர்செனிக் ஹைட்ரைட் (ஆர்சைன்) |
| 26. | ஆர்செனிக் பென்டாக்சைட்(ஆர்செனிக்) (V) ஆசிட் மற்றும் உப்புகள் |
| 27. | ஆர்செனிக் டிரை ஆக்சைட், ஆர்சினியஸ் (iii) அமிலங்கள் மற்றும் உப்புகள் |
| 28. | ஆஸ்பெஸ்டாஸ் |
| 29. | அசின்போஸ்—எத்தீல் |
| 30. | அசின்போஸ்— மீத்தைல் |
| 31. | பேரியம் அசைட் |
| 32. | பென்சின் |
| 33. | பென்சிடைன் |
| 34. | பென்சிடைன் உப்புகள் |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 35. | பென்சோகுயினான் |
| 36. | பென்சாயில் குளோரைடு |
| 37. | பென்சாயில் பெராக்ஸைட் |
| 38. | பென்சைல் குளோரைடு |
| 39. | பென்சைல் சயனைட் |
| 40. | பெரிலியம் (பவுடர்கள், சேர்மானங்கள்) |
| 41. | பைபினையில் |
| 42. | பிஸ் (2–குளோரோமீத்தைல்) கீடோன் |
| 43. | பிஸ் (2, 4, 6– டிரைமித்ரோபினல்) அமின் |
| 44. | பிஸ் (2–குளோரோ ஈத்தைல்) சல்பைட் |
| 45. | பிஸ் (குளோரோமீத்தைல்) கீடோன் |
| 46. | பிஸ் (டெர்ட்–பியூட்டில்பெராக்ஸி) பியூட்டோன்–2, 2 |
| 47. | பிஸ் (டெர்ட்– பியூட்டில்பெராக்ஸி) சைக்ளோஹெக்யேன் 11 |
| 48 | பிஸ் 1, 2 டிரைப்ரோமோபினாக்ஸி–ஈத்தேன் |
| 49. | பிஸ்பினால் |
| 50. | போரான் மற்றும் சேர்மானங்கள் |
| 51. | புரோமின் |
| 52. | புரோமின் பென்டாப்ளோரைட் |
| 53. | புரோமோபார்ம் |
| 54. | பியூட்டாடைன் – 1, 3 |
| 55. | பியூட்டேன் |
| 56. | பியூட்டானன்–2 |
| 57. | பியூட்டாக்ஸி எத்தனால் |
| 58. | பியூட்டில் கிளைசிடால் ஈதர் |
| 59. | பியூட்டில் பெராக்ஸி அசிட்டேட், டெர்ட் |
| 60. | பியூட்டில் பெராக்ஸி ஐஸோபியூட்டிரெட் டெர்ட் |
| 61. | பியூட்டில் பெராக்ஸி ஐஸோபுரோபைல் கார்போனேட், டெர்ட் |
| 62. | பியூட்டில் பெராக்ஸிமேலியேட், டெர்ட் |
| 63. | பியூட்டில் பெராக்ஸிபைவேலேட், டெர்ட் |
| 64. | பியூட்டில் வினையில் ஈதர் |
| 65. | பியூட்டில்–என்–மெர்கோப்டன் |
| 66. | பியூட்டிலமைன் |
| 67. | C 9 – அரோமேட்டிக் ஹைட்ரோ கார்பன் பிராக்ஷன் |
| 68. | காட்மியம் மற்றும் சேர்மானங்கள் |
| 69. | காட்மியம் ஆக்ஸைட் (பியூம்ஸ்) |
| 70. | கால்சியம் சயனைட் |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
| --- | --- |
| *(1)* | *(2)* |
| 71. | கேப்டன் |
| 72. | கேப்டோஃபோல் |
| 73. | கார்பாரில் (செவின்) |
| 74. | கார்போப்யூரான் |
| 75. | கார்பன்டை சல்பைட் |
| 76. | கார்பன் மோனாக்னசைட் |
| 77. | கார்பன் டெட்ராகுளோரைடு |
| 78. | கார்போ பினோதியான் |
| 79. | செலுலோஸ் நைட்ரேட் |
| 80. | குளோரேட்ஸ் (வெடிமருந்துகளில் பயன்படுவது) |
| 81. | குளோர்டேன் |
| 82. | குளோர்பென் வின்போஸ் |
| 83. | குளோரினேட்டட் பென்சின்ஸ் |
| 84. | குளோரின் |
| 85. | குளோரின் டை ஆக்ஸைட் |
| 86. | குளோரின் ஆக்ஸைட் |
| 87. | குளோரின் டிரைப்ளோரைடு |
| 88. | குளோரோ மேகுவாட் குளோரைடு |
| 89. | குளோரோ அசிட்டால் குளோரைடு |
| 90. | குளோரோ அசிட்டால்டி ஹைட் |
| 91. | குளோரோ அனிலின்–2 |
| 92. | குளோரோ அனிலின்–4 |
| 93. | குளோரோ பென்சின் |
| 94. | குளோரோ டைபினைல் |
| 95. | குளோரோ பாக்ஸி ப்ரோபேன் |
| 96. | குளோரோ எத்தனால் |
| 97. | குளோரோ எத்தில் குளோரோ பார்மேட் |
| 98. | குளோரோ ப்ளூரோ கார்பன்கள் |
| 99. | குளோரோபார்ம் |
| 100. | குளோரோபார்மைல்–4, மார்போலின் |
| 101. | குளோரோ மீத்தேன் |
| 102. | குளோரோ மீத்தைல் ஈதர் |
| 103. | குளோரோ மீத்தைல் மீத்தைல் ஈதர் |
| 104. | குளோரோ நைட்ரோ பென்சீன் |
| 105 | குளோரோபிரின் |
| 106. | குளோரோ சல்போனிக் ஆசிட் |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 107. | குளோரோ நைட்ரோ பென்சீன் |
| 108. | குளோரோக்ளஸ்யூரான் |
| 109. | குரோமியம் மற்றும் சேர்மானங்கள் |
| 110. | கோபால்ட் மற்றும் சேர்மானங்கள் |
| 111. | காப்பர் மற்றும் சேர்மானங்கள் |
| 112. | கௌமாப்யூரில் |
| 113. | கௌமாபோர் |
| 114. | கௌமா டெட்ராயில் |
| 115. | கிரிஸால்ஸ் |
| 116. | கிரிமிடின் |
| 117. | கியூமின் |
| 118. | சைனாபோஸ் |
| 119. | சைனாதோட் |
| 120. | சைநியூரிக் ப்ளோரைடு |
| 121. | சைக்ளோஹெக்ஸேன் |
| 122. | சைக்ளோஹெக்ஸனால் |
| 123. | சைக்ளோஹெக்ஸனன் |
| 124. | சைக்ளோஹெக்ஸிமைட் |
| 125. | சைக்ளோபென்டாடைன் |
| 126 | சைக்ளோபென்டேன் |
| 127. | சைக்ளோடெட்ராமெத்திலீன் டெட்ராநைட்ரமைன் |
| 128. | சைக்ளோட்ரைமெத்திலீன் ட்ரைநைட்ரமைன் |
| 129. | டிடிட்டி |
| 130. | டெக்கா புரோமோ டைபினைல் ஆக்ஸைட் |
| 131. | டிமிட்டான் |
| 132. | டை–ஐசோப்யூட்டில் பெராக்னஸைட் |
| 133. | டை–n–ப்ரோபைல் பெராக்ஸி டை கார்பனேட் |
| 134. | டை–சீக்–ப்யூட்டில் பெராக்ஸி டை கார்பனேட் |
| 135. | டையாலிபோஸ் |
| 136. | டை அசோடைநைட்ரோபீனால் |
| 137. | டை அசோ மீத்தேன் |
| 138. | டைபென்சில் பெராக்ஸி டை கார்போனேட் |
| 139. | டைகுளோரோ அசிட்டிலின்-o |
| 140. | டைகுளோரோ பென்சீன்-o |
| 141. | டைகுளோரோ பென்சீன்- p |
| 142. | டைகுளோரோ ஈத்தேன் |

| தொடர் எண். | இரசாயனப் பொருட்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 143. | டைகுளோரோ எத்தில் ஈதர் |
| 144. | டைகுளோரோ பினால்– 2, 4 |
| 145. | டைகுளோரோ பினால்– 2, 6 |
| 146. | டைகுளோரோ பினாக்ஸி அசிட்டிக் ஆசிட் 2, 4 (2, 4–D) |
| 147. | டைகுளோரோ ப்ரோபேன் – 1, 2 |
| 148. | டைகுளோரோ சலிசிலிக் ஆசிட்–3, 5 |
| 149 | டைகுளோரோவோஸ் (DDVP) |
| 150. | டைகுரோட்டோபோஸ் |
| 151. | டைஎல்டிரின் |
| 152. | டைபாக்சி ப்யூட்டேன். |
| 153. | டைஎத்தில் பெராக்ஸி டைகார்போனேட் |
| 154. | டைஎத்திலின் க்ளைகால் டைநைட்ரேட் |
| 155. | டைஎத்திலின் டிரைஅமின் |
| 156. | டைஎத்திலின் க்ளைகால் ப்யூட்டைல் ஈதர்/டைஎத்திலின் க்ளைகால் ப்யூட்டில் அசிட்டேட் |
| 157. | டைஎத்திலின் டிரைஅமின் (DETA) |
| 158. | டைகிளைசிடில் ஈதர் |
| 159. | டை நைட்ரோ பெராக்ஸி ப்ரோபேன்–2, 2 |
| 160. | டை–ஐசோப்யூட்டிரில் பெராக்சைட் |
| 161. | டைமிஃபாக்ஸ் |
| 162. | டைமித்தோயேட் |
| 163. | டைமீத்தைல் பாஸ்போர்அமிடோ சையனைடிக் ஆசிட் |
| 164. | டைமீத்தைல் தாலேட் |
| 165. | டைமீத்தைல் கார்போமில் |
| 166. | டைமீத்தைல் நைட்ரோசைமன் |
| 167. | டை நைட்ரோபீனால், உப்புகள் |
| 168. | டை நைட்ரோ டொலுவீன் |
| 169. | டை நைட்ரோ–0–கிரெசால் |
| 170. | டைஆக்ஸேன் |
| 171. | டைஆக்ஸோதியான் |
| 172. | டைஆக்ஸோலேன் |
| 173. | டைபாக்கிசினோன் |
| 174. | டைபாஸ்போரமைட் ஆக்டோமீத்தைல் |
| 175. | டைப்ரோபலீன் க்ளைகால் மீத்தைல் ஈதர் |
| 176. | டைசுல்போடான் |
| 177. | எண்டோசல்ஃபான் |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 178. | எண்டிரின் |
| 179. | எபிகுளோரோஹைடிரின் |
| 180. | ஈ ப்பி என் (EPN) |
| 181. | ஈபாக்ஸிப்ரோபேன்–1, 2 |
| 182. | எதியான் |
| 183. | எத்தில் கார்பமேட் |
| 184. | எத்தில் ஈதர் |
| 185. | எத்தில் ஹெக்சனால்–2 |
| 186. | எத்தில் மெர்கேப்டன் |
| 187. | எத்தில் மீத்தா க்ரைலேட் |
| 188. | எத்தில் நைட்ரேட் |
| 189. | எத்திலமைன் |
| 190. | எத்திலீன் |
| 191. | எத்திலீன் குளோரோஹைடிரின் |
| 192. | எத்திலீன் டையமின் |
| 193. | எத்திலீன் டைப்ரோமைட் |
| 194. | எத்திலீன் டைகுளோரைடு |
| 195. | எத்திலீன் க்ளைகால் டைநைட்ரேட் |
| 196. | எத்திலீன் ஆக்சைட் |
| 197. | எத்திலீனமைன் |
| 198. | எத்தில்தையோ–சயனேட் |
| 199. | பென்சல்போதியான் |
| 200. | ப்ளூயேன்டிடில் |
| 201. | ப்ளோரோ–4, 2–ஹைட்ராக்ஸி ப்யூட்டிரிக் அமிலம் மற்றும் உப்புகள், எஸ்டர், அமைடுகள் |
| 202. | ப்ளோரோ அசிட்டிக் அமிலம் மற்றும் உப்புகள், எஸ்டர்ஸ், அமைடுகள் |
| 203. | ப்ளோரோ ப்யூட்ரிக் அமிலம்–4 மற்றும் உப்புகள், எஸ்டர்ஸ், அமைடுகள் |
| 204. | ப்ளோரோ கார்டோனிக் அமிலம்–4 மற்றும் உப்புகள், எஸ்டர்ஸ், அமைடுகள் |
| 205. | பார்மால்டிஹைட் |
| 206. | க்ளைகோ நைட்ரில் (ஹைட்ராக்ஸி அசிட்டோ நைட்ரில்) |
| 207. | குனைல்,–1,–4,– நைட்ரோஸ் அமினோ குனைல்–1–டெட்ராசீன் |
| 208. | ஹெப்டாக்லர் |
| 209. | ஹெக்ஸாகுளோரோ சைக்ளோ பென்டாடைன் |
| 210. | ஹெக்ஸாகுளோரோ சைக்ளோ ஹெக்சேன் |
| 211. | ஹெக்ஸாகுளோரோ சைக்ளோ மீத்தேன் |
| 212. | ஹெக்ஸாகுளோரோ டைபென்சோ–P–டையாப்சின் 1, 2, 3, 7, 8, 9. |
| 213. | ஹெக்ஸா ப்ளோரோ ப்ரோபீன் |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 214. | ஹெக்ஸா மீத்தைல் பாஸ்போரமைட் |
| 215. | ஹெக்ஸா மீத்தைல் 3,3,6,9,9–1,2,4,5–T டெட்ராக்சா சைக்ளோனேன் |
| 216. | ஹெக்ஸா மெத்திலீன் டையமின் |
| 217. | ஹெக்சேன் |
| 218. | ஹெக்ஸா நைட்ரோசில்பீன்–2.2.4.4.6.6 |
| 219. | ஹெக்ஸா வேலண்ட் குரோமியம் |
| 220. | ஹைட்ராசீன் |
| 221. | ஹைட்ராசீன் நைட்ரேட் |
| 222. | ஹைட்ரோ குளோரிக் அமிலம் |
| 223. | ஹைட்ரஜன் |
| 224. | ஹைட்ரஜன் ப்ரோமைட் (ஹைட்ரோ ப்ரோமிக் அமிலம்) |
| 225. | ஹைட்ரஜன் குளோரைட் (திரவ வாயு) |
| 226. | ஹைட்ரஜன் சயனைட் |
| 227. | ஹைட்ரஜன் ப்ளோரைட் |
| 228. | ஹைட்ரஜன் செலினைட் |
| 229. | ஹைட்ரஜன் சல்பைட் |
| 230. | ஹைட்ரோக்யூனைன் |
| 231. | அயோடின் |
| 232. | ஐசோ பென்சான் |
| 233. | ஐசோ–டிரின் |
| 234. | ஐசோ போரோன் டைஐஸோ சயனேட் |
| 235. | ஐசோ ப்ரோபைல் ஈதர் |
| 236. | ஜக்லோன் (5–ஹைட்ராக்ஸி நாப்தலீன்–1,4 டையோன்) |
| 237. | காரீயம் (Inorganic fumes and dusts) |
| 238. | காரீயம் 2,4,6,–ட்ரை நைட்ரோரெசார்சீன் ஆக்சைட் (காரீயம் ஸ்டைபீனேட்) |
| 239. | காரீயம் அசைடு |
| 240. | லெப்டோபோஸ் |
| 241. | லிண்டேன் |
| 242. | திரவ பெட்ரோலிய எரிவாயு (LPG) |
| 243. | மாலியிக் ஆன்ஹைட்ரைட் |
| 244. | மாங்கனீஸ் மற்றும் சேர்மானங்கள் |
| 245. | மெர்கேப்டோ பென்சோதியாசோல் |
| 246. | மெர்குரி ஆல்கைல் |
| 247. | மெர்குரி புல்மினேட் |
| 248. | மெர்குரி மீத்தைல் |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 249. | மெத்தாக்ரைலிக் ஆன்ஹைட்ரைட் |
| 250. | மெத்தாக்ரைலோ நைட்ரைல் |
| 251. | மெத்தாக்ரைலோயல் குளோரைடு |
| 252. | மெத்தாமைடாஃபாஸ் |
| 253. | மெத்தேன்சல்போனில் ப்ளூரைட் |
| 254. | மெத்தான்தியால் |
| 255. | மெத்தாக்ஸி எத்தனால் (2– மீத்தைல் செலோசால்) |
| 256. | மெத்தாக்ஸி ஈத்தைல் மெர்குரிக் அசிடேட் |
| 257. | மெத்தில் அக்ரிலேட் |
| 258. | மெத்தில் ஆல்கஹால் |
| 259. | மெத்தில் அமைல் கீட்டோன் |
| 260. | மெத்தில் புரோமைடு (புரோமோ மீத்தேன்) |
| 261. | மெத்தில் குளோரைடு |
| 262. | மெத்தில் குளோரோஃபார்ம் |
| 263. | மெத்தில் சைக்ளோஹெக்சைன் |
| 264. | மெத்தில் எத்தில் கீட்டோன் பெராக்ஸைடு |
| 265. | மெத்தில் ஹைட்ரசைன் |
| 266. | மெத்தில் ஐசோ பியூட்டைல் கீட்டோன் |
| 267. | மெத்தில் ஐசோ பியூட்டைல் கீட்டோன் பெராக்ஸைடு |
| 268. | மெத்தில் ஐசோ சயனேட் |
| 269. | மெத்தில் ஐசோ தயோசயனேட் |
| 270. | மெத்தில் மெர்காப்டன் |
| 271. | மெத்தில் மெத்தாக்ரிலேட் |
| 272. | மெத்தில் பராதியான் |
| 273. | மெத்தில் பாஸ்போனிக் டை குளோரைடு |
| 274. | மெத்தில்–N 2,4,6,–டெட்ரா நைட்ரோ அனலீன் |
| 275. | மெத்திலீன் குளோரைடு |
| 276. | மெத்திலீனிபிஸ்–4, 4 (2,–குளோரோ அனலீன்) |
| 277. | மெத்தில் ட்ரைகுளோரோசிலேன் |
| 278. | மேவின்பாஸ் |
| 279. | மாலிப்டினம் & அதன் கலவைகள் |
| 280. | N–மெத்தில் N–2,4,6, டெட்ரா நைட்ரோ அனலீன் |
| 281. | நாப்தா (கரித் தார்) |
| 282. | நாப்தாலமைன், 2 |
| 283. | நிக்கல் & அதன் கலவைகள் |
| 284. | நிக்கல் டெட்ராகார்போனைல் |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 285. | நைட்ரோ அனலீன்–O |
| 286. | நைட்ரோ அனலீன்–P |
| 287. | நைட்ரோ பென்சீன் |
| 288. | நைட்ரோ குளோரோ பென்சீன் P |
| 289. | நைட்ரோ சைக்ளோ ஹெக்சேன் |
| 290. | நைட்ரோ ஈத்தேன் |
| 291. | நைட்ரஜன்–டை–ஆக்சைடு |
| 292. | நைட்ரஜன் ஆக்சைடுகள் |
| 293. | நைட்ரஜன் ட்ரை ப்ளோரைடு |
| 294. | நைட்ரோக்ளிசரின் |
| 295. | நைட்ரோபீனால்–P |
| 296. | நைட்ரோப்ரோப்பேன்–1 |
| 297. | நைட்ரோப்ரோப்பேன்–2 |
| 298. | நைட்ரோசோ மெத்தைல் அமைன் |
| 299. | நைட்ரோலியூன் |
| 300. | ஆக்டோ புரோமோ பீனைல் ஆக்சைடு |
| 301. | ஒலியம் |
| 302. | ஒலியமைன் |
| 303. | 00–டை எத்தில் S–ஈத்தைல் சல்போனைல் மெத்தில் |
| 304. | 00–டை எத்தில் S–ஈத்தைல் சல்போனைல் மெத்தில் பாஸ்போரோதையோட் |
| 305. | 00–டை எத்தில் S–ஈத்தைல் தயோ மெத்தில் பாஸ்பெரோதையோட் |
| 306. | 00–டை எத்தில் S–ஐசோ ப்ரோபைல் தயோ மெத்தில் பாஸ்பெரோ டைதையோட் |
| 307. | 00–டை எத்தில் S–ப்ரோபைல் தயோ மெத்தில் பாஸ்பெரோ டைதையோட் |
| 308. | ஆக்ஸமைல் |
| 309. | ஆக்ஸிடைல் சல்போட்டோன் |
| 310. | ஆக்ஸிஜன் (திரவம்) |
| 311. | ஆக்ஸிஜன் டை புளோரைடு |
| 312. | ஒசோன் |
| 313. | பராக்ஸோன் (டை எத்தில் –4 நைட்ரோ பினைல் பாஸ்பேட்) |
| 314. | பராக்குவாட் |
| 315. | பராதையான் |
| 316. | பாராதையான் மெத்தில் |
| 317. | பாரீஸ் க்ரீன் (பிஸ் அசிட்டோ ஹெக்ஸாமெட்டார்சன் டெட்ரா காப்பர்) |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 318. | பென்டா போரான் |
| 319. | பென்டா புரோமோடைபினைல் ஆக்ஸைடு |
| 320. | பென்டா புரோமோபினால் |
| 321. | பென்டா குளோரோ நாப்தலீன் |
| 322. | பென்டா குளோரோ ஈத்தேன் |
| 323. | பென்டா குளோரோ பினால் |
| 324. | பென்டா எரித்ரிடால் டெட்ரா நைட்ரேட் |
| 325. | பென்டேன் |
| 326. | பரா அசிட்டிக் அமிலம் |
| 327. | பெர்குளோரோ எத்திலீன் |
| 328. | பெர்குளோரோ மெத்தில் மெர்காப்டன் |
| 329. | பென்டனோன் 2, 4–மெத்தில் |
| 330. | பினால் |
| 331. | பினால் கிளைசிடால் ஈதர் |
| 332. | பினலைன் P டையமைன் |
| 333. | பினைல் மெர்குரி அசிடேட் |
| 334. | போரேட் |
| 335. | பாஸ்அசிடைம் |
| 336. | பாஸ்ஃஅலன் |
| 337. | பாஸ்ஃபோலன் |
| 338. | பாஸ்ஜீன் (கார்போனைல் குளோரைடு) |
| 339. | பாஸ்மெட் |
| 340. | பாஸ்பாமிடான் |
| 341. | பாஸ்பீன் (ஹைட்ரஜன் பாஸ்பைடு) |
| 342. | பாஸ்பாரிக் அமிலமும், எஸ்தர்களும் |
| 343. | பாஸ்பாரிக் அமிலம், புரோமோ ஈத்தைல் புரோமோ (2, 2 – டை மெத்தில் புரோபைல்) புரோமோ ஈத்தைல் எஸ்தர் |
| 344. | பாஸ்பாரிக் அமிலம், புரோமோ ஈத்தைல் புரோமோ (2, 2 – டை மெத்தில் புரோபைல்) குளோரோ ஈத்தைல் எஸ்தர் |
| 345. | பாஸ்பாரிக் அமிலம், குளோரோ ஈத்தைல் புரோமோ (2, 2 – டை மெத்தாக்ஸி புரோபைல் குளோரோ ஈத்தைல் எஸ்தர்) |
| 346 | பாஸ்பரஸ் & அதன் கலவைகள் |
| 347. | பாஸ்டாலன் |
| 348. | பிக்ரிக். அமிலம் (2, 4, 6–ட்ரை நைட்ரோ பீனால்) |
| 349. | பாலி புரோமினேட்டேட் பைபினைல்ஸ் |
| 350. | பொட்டாசியம் ஆர்சினைட் |
| 351. | பொட்டாசியம் குளோரேட் |

| *தொடர் எண்.* | *இரசாயனப் பொருட்களின் பெயர்.* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 352. | புரோமுரிட் [1,– (3,4,– டைகுளோரோ பினைல்)–3 ட்ரையசின் எத்தியோ கார்பாக்சமைடு] |
| 353. | புரோப்பேன் சல்டோன்–1, 3 |
| 354. | புரோப்பேன்–1,–2–குளோரோ–1,–3 டை அசிடேட் |
| 355. | புரோப்பிலீன் ஆக்ஸைடு |
| 356. | புரோப்பிலீனமைன் |
| 357. | ப்ரையேக்சான் |
| 358. | செலினியம் ஹெக்ஸாப்ளோரைடு |
| 359. | செமிகார்ப்பமைஸ்டு ஹைட்ரோ குளோரைடு |
| 360. | சோடியம் ஆர்சினைட் |
| 361. | சோடியம் அசைடு |
| 362. | சோடியம் குளோரேட் |
| 363. | சோடியம் சயனைடு |
| 364. | சோடியம் பைகிராமேட் |
| 365. | சோடியம் செலினேட் |
| 366. | ஸ்டெரீன் 1, 1, 3, 2– டெட்ராகுளோரோ ஈத்தேன் |
| 367. | சல்ஃபோடெப் |
| 368. | சல்பர் டைகுளோரைடு |
| 369. | சல்பர் டை ஆக்சைடு . |
| 370. | சல்பர் ட்ரை ஆக்சைடு |
| 371. | சல்ஃப்யூரிக் அமிலம். |
| 372. | சல்ஃபாக்சைடு, 3– ப்ரோஃபைலாக்டைல் |
| 373. | டெல்லூரியம் |
| 374. | டெல்லூரியம் ஹெக்ஸாப்ளோரைடு |
| 375. | ட்டி இ ப்பி ப்பி (TEPP) |
| 376. | டெர்பியூபோஸ் |
| 377. | டெட்ராபுரோமோபைஸ்பீனால் |
| 378. | டெட்ராகுளோரோ 2, 2, 5, 6, 2, 5–சைக்ளோ ஹெக்ஸாடைன்–1, 4 – டையோன் |
| 379. | டெட்ராகுளோரோ டைபென்சோ –p டையாக்சின் 2, 3, 7, 8 (TCDD) |
